## மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு கோருரிமை தீர்பாயம்
## முதன்மை சார்பு நீதிமன்றம்,
## கும்பகோணம்.

| | | |
|---|---|---|
| **MCOP.N 239/2019 and 209/2019** | **நாள்.03.03.2026** | **சாட்சி – ம.சா.2** |

**பெயர் :** **பரமேஸ்வரி க/பெ. முத்தையன்**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :–**

வழக்கு விபத்து சமயத்தில் நான் காரில் சென்றேன் என்றால் சரி. அந்த காரை எனது மகன் ஓட்டினார். காரில் எனது 2 மகன்கள் எனது மகள் மற்றும் நான் ஆகியோர் சென்றோம். 24.09.2018 இரவு 11 மணிக்கு திருவண்ணாமலையில் இருந்து எனது மகன் கார் ஓட்ட திரும்பினோம்.25.09.2018 அன்று விடியற்காலை சுமார் 3.40 மணிக்கு விபத்து நடந்தது. 2 வழக்குகளிலும் மா.சா.ஆ. 1 புகாரின் அடிப்படையில் தான் இழப்பீடு கோருகிறேன் என்றால் சரி. விபத்து நான்கு ரோடுகள் சந்திக்கும் ஜெயங்கொண்டம் குறுக்கு ரோட்டிற்கு முன்பாக திருமகள் திருமண மண்டபத்திற்கு அருகில் நடந்தது. மா.சா.ஆ.1 புகாரை தவிர வேறு புகார்கள் எதுவும் வேறு எந்த நீதிமன்றத்திலும் கொடுக்கவில்லை. மனுவிலும் நிருபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள சங்கதிகளை நிரூபிக்க வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நான் விபத்தின் பொழுது பின் இருக்கையில் அமர்ந்து இருந்தேன். நான் பால் வியாபரம் செய்து வருமானம் ஈட்டுவதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. அன்பு மருத்துவமனையில் எனக்கு அறுவை சிகிச்சை எதுவும் செய்யபட வில்லை என்றால் சரி. மா.சா.ஆ.3 என்பது எனது மகன் பாலாஜியின் விபத்து பதிவேடு என்றால் சரி. அதில் உள்ள விபரங்கள்

சரியானவை. விபத்து சம்பந்தமாக ஜெயங்கொண்டம் குற்றவியல் நடுவர் எண் 2ல் வழக்கு நடந்தது என்றால் சரி. அந்த வழக்கில் நான் கொடுத்த சாட்சிய வாக்குமூலத்தை தான் மா.சா.ஆ.11 ஆக தாக்கல் செய்தேன் என்றால் சரி. அதில் நான் பிறழ் சாட்சியாக மாறியுள்ளேன் என்றால் சரி. அந்த வழக்கு என் மகன் பாலாஜி மீது கொடுக்கப்பட்டிருந்தது. என் மகனை காப்பாற்ற வேண்டும் என்று குற்ற வழக்கில் பிறழ் சாட்சியம் அளித்தேன் என்றால் சரியல்ல. நஷ்ட ஈடு பெறும் நோக்கத்தோடு முதல் விசாரணை வாக்குமூலத்தில் பொய்யான சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் 1ம் எதிர்மனுதாரர் அரசியல் செல்வாக்கு உள்ளவர் என்பதாலும் உள்ளூர்காரர் என்பதாலும் காவல் துறையினர் நாங்கள் கொடுத்த புகாரை மறைத்து எங்களுக்கு எதிராக தவறான வழக்கு போட்டதாக சொல்லியுள்ளதை நிரூபிக்க வேறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. தவறான வழக்கு பதிவு செய்யப்பட்டதாக இதுவரை வேறு புகாரோ வழக்கோ நாங்கள் பதிவு செய்யவில்லை என்றால் சரி. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்றால் சரியல்ல. மா.சா.ஆ.15ல் காணப்படும் தொகைகள் அனைத்தும் ஏற்கெனவே மா.சா.ஆ. 14ல் காணப்படுகிறது என்றால் சரி. மா.சா.ஆ.17. மருத்துவ பில்கள் அனைத்திலும் மருத்துவமனையின் சீலும் கையெழுத்தும் இல்லை என்றால் சரி. மா.சா.ஆ.17 பில்களில் பல பில்கள் டுப்லிகேட் பார்மஸி பில்கள் காணப்படுகிறது. மா.சா.ஆ.16 மருத்துவ பில்கள் சீல் இல்லை என்றால் சரி. மா.சா.ஆ.14 முதல் 18 வரை உள்ள ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. எனக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு முழு காரணமும்

என் மகன் தான் என்றாலும் 1ம் எதிர் மனுதாரர் கிடையாது என்றாலும் சரியல்ல. நஷ்டஈடு பெற வேண்டும் என்பதற்காக 1ம் எதிர் மனுதார்ர் விபத்தை ஏற்படுத்தியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்சமயம் கணவர் முத்தையன் இறந்துவிட்டார். என் மகனின் வருமானத்தை நம்பிவாழ வில்லை என்றால் சரியல்ல. எனக்கு உயர் வருமானம் கிடையாது என்றால் சரியல்ல. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் காரணம் இல்லை என்பதால் 2ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க அவசியம் இல்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு முழு காரணமும் என் மகன் தான் என்றாலும் அவரது கவன குறைவால் தான் விபத்து ஏற்பட்டு அவருக்கு மரணமும் எனக்கு காயமும் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

<u>4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

எனது மகன் வடிவரசன் கார் ஓட்ட நான் பின்னால் அமர்ந்து முழித்துகொண்டு தான் விபத்தின் பொழுது இருந்தேன். என் மகன் ஜாக்கிரதையாகவும் மெதுவாகவும் கார் ஓட்டினார் என்றாலும் விபத்திற்கு என் மகன் காரணம் இல்லை என்றாலும் சரி. மா.சா.ஆ.1 புகார் என் மகள் சுகன்யா கொடுத்ததாக உள்ளது என்றால் என் மகள் புகார் கொடுக்கவில்லை. என் மகள் சுகன்யாவிற்கு முகம் முழுவதும் காயம் ஏற்பட்டு கைகளிலும் காயம் ஏற்பட்டு பேச முடியாமல் இருந்தார். நாங்கள் பயணம் செய்த TN.49.L 1845 வேகனார் வாகனம் எங்களுக்கு சொந்தமான வாகனம் ஆகும். 3 ,4 எதிர்மனுதாரர்களை வழக்கில் ஒப்புக்காக தான் சேர்த்துள்ளோம் என்றாலும் அவர்களுக்கு எதிராக நஷ்டஈடு எதுவும் கேட்டவில்லை என்றாலும் சரி.

<u>மறுவிசாரணை</u>

இல்லை

(Contributory Negligence)

மேற்கண்ட சாட்சியம் சாட்சியால் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு விவரிக்கப்பட்டு கணிப்பொறியில் நேரடியாக தட்டச்சு செய்து சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு இன்று திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் கையெழுத்து பெறப்பட்டது.

ZIAVUR RAHUMAN M

Digitally signed by ZIAVUR RAHUMAN M
Date: 2026.03.03 17:39:18 +0530

Principal Subordinate Judge,

Kumbakonam.